பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 625 **நாள்: 28.10.2026**

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து குளோபல் அட்ஜஸ்ட்மென்ட்ஸ் அறக்கட்டளையின் Champion Woman முன்னெடுப்புடன் இணைந்து, மாநகராட்சிப் பள்ளிகளில் பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும், பாலினம் சார்ந்த ஒரே மாதிரியான கருத்துக்களை மாற்றவும், பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பாலின உணர்வுள்ள பள்ளிச் சூழலை உருவாக்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று மேற்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைந்து குளோபல் அட்ஜஸ்ட்மென்ட்ஸ் அறக்கட்டளையின் (Global Adjustments Foundation) Champion Woman முன்னெடுப்புடன் இணைந்து, மாநகராட்சிப் பள்ளிகளில் பாலின சமத்துவத்தை மேம்படுத்தவும், பாலினம் சார்ந்த ஒரே மாதிரியான கருத்துக்களை மாற்றவும், பாதுகாப்பான, அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் பாலின உணர்வுள்ள பள்ளிச் சூழலை உருவாக்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தம் மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (28.10.2026) ரிப்பன் கட்டட அலுவலக கூட்டரங்கில் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில், இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., குளோபல் அட்ஜஸ்ட்மென்ட்ஸ் அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் டாக்டர் ரஜினி மணியன், செயல் இயக்குநர் திருமதி லட்சுமி சுப்பிரமணியன் உடனிருந்தனர்.

இந்தக் கூட்டாண்மை, பாலினப் பாகுபாடுகளைக் கண்டறிந்து அவற்றை எதிர்கொள்வதற்கும், வகுப்பறைகளில் பாலின உணர்வுள்ள கற்பித்தல் நடைமுறைகளைப் பின்பற்றுவதற்கும், சமத்துவம், மரியாதை மற்றும் பாகுபாடற்ற அணுகுமுறையை ஊக்குவிப்பதற்கும் ஆசிரியர்களின் திறன்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆசிரியர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டங்களில் மன அழுத்த மேலாண்மை, பணிக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இடையிலான சமநிலை மற்றும் பாலின சமத்துவத்தை முன்னிறுத்தும் தலைமைத்துவம் ஆகியவை இடம்பெறும். முதற்கட்டமாக, பள்ளிகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்களுக்கான முன்னோடிப் பயிற்சித் திட்டம் செயல்படுத்தப்பட்டு, தொடர்ந்து பயிற்றுநர்களைப் பயிற்றுவிக்கும் (Train-the-Trainer) முறை மூலம் ஆசிரியர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும்.

மேலும், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிப் பணியாளர்களுக்கான பாலின உணர்வூட்டல் பயிலரங்குகள், பெண் ஆசிரியர்களுக்கான தலைமைத்துவம் மற்றும் வழிகாட்டுதல் வாய்ப்புகள், பாதுகாப்பான மற்றும் மரியாதையான பணிச்சூழல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியவற்றையும் இக்கூட்டாண்மை முன்னெடுக்க உள்ளது. மாணவர்களிடையே பாலின சமத்துவம், பரஸ்பர மரியாதை மற்றும் வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்துவதற்கான வயதுக்கேற்ற விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

பெருநகர சென்னை மாநகராட்சியின் பாலினம் மற்றும் கொள்கை ஆய்வகம், பள்ளிச் செயல்பாடுகளில் பாலின சமத்துவத்தை ஒருங்கிணைத்து, கண்ணியம், உள்ளடக்கம் மற்றும் சம வாய்ப்புகளை மதிக்கும் எதிர்காலத் தலைமுறையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,
பெருநகர சென்னை மாநகராட்சி.

GREATER CHENNAI CORPORATION

PRESS RELEASE

P.R.No. 624 **Date : 28.10.2026**

Greater Chennai Corporation and Global Adjustments Foundation Join Hands to Advance Gender Equality in Schools

Chennai, 28 October 2026: The Greater Chennai Corporation (GCC), through its Gender and Policy Lab (GPL), has signed a Memorandum of Understanding (MoU) with the Global Adjustments Foundation, through its *Champion Woman* initiative, to promote gender equality, challenge gender stereotypes and foster safe, inclusive and gender-sensitive school environments across GCC schools.

The collaboration focuses on strengthening teachers' capacity to recognise and address gender bias, integrate gender-sensitive practices into classrooms, and promote equality, respect and non-discrimination. Faculty Development Programmes will cover stress management, work-life integration and gender-responsive leadership, beginning with a pilot programme for school Nodal Officers and progressing towards a Train-the-Trainer model.

The partnership will also facilitate gender sensitisation workshops, leadership and mentorship opportunities for women teachers, awareness on safe and respectful workplaces, and age-appropriate student engagement on gender equality, respect and life skills.

Through this initiative, GCC's Gender and Policy Lab seek to mainstream gender equality in school practices and nurture a generation that values dignity, inclusion and equal opportunities for all.

Issued by : Joint Director/Public Relations Officer,
Greater Chennai Corporation